email print add to clipping Article Rank

# காரைக்குடி சிக்ரியில் ‘இ-லைப்ரரி’ துவக்கம்

காரைக்குடி, செப்.10-

காரைக்குடி சிக்ரி நூலகத்தில் 50 ஆயிரம் புத்தகங்களை கம்ப்யூட்டர் மூலம் படிக்கும் ‘இ-லைப்ரரி’ திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

காரைக்குடி சிக்ரியில் 1953ம் ஆண்டு முதல் நூலகம் செயல்படுகிறது. இங்கு மின்வேதியியல் ஆராய்ச்சி புத்தகம், காப்புரிமை பெற்ற ஆராய்ச்சி நூல்கள், வெளிநாட்டு, இந்திய நூல்கள் என 47 ஆயிரத்து 391 புத்தகங்கள் உள்ளன. ரூ.56 லட்சம் மதிப்புள்ள 120 தலைப்புகளுடைய வெளிநாட்டு, இந்திய இதழ்கள், 7ஆயிரத்து 500 தலைப்புகளில் காப்புரிமை பெற்ற புத்தகங்கள், 2 ஆயிரத்து 800 தலைப்புகளில் மத்திய அரசால் தரம்பெற்ற புத்தகங்கள், 2 ஆயிரத்து 700 தலைப்புகளில் மின்வேதியியல் ஆராய்ச்சி கட்டுரைகள், ‘சிடி’வடிவிலான ஆய்வு கட்டுரைகள் வைக்கப்பட்டுள்ளன.

**‘இ-லைப்ரரி துவக்கம்:** இந்தியாவிலேயே மின்வேதியியல் ஆராய்ச்சிக்கு தேவையான காப்புரிமை பெற்ற நூல்களை தாங்கியிருக்கும் இடம் காரைக்குடி சிக்ரி நூலகம் தான். இங்குள்ள புத்தகங்களை கல்லூரி, பல்கலை., ஆராய்ச்சி நிறுவனங்களில் உள்ள மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் கம்ப்யூட்டர் மூலம் பார்த்து படித்து பயன் பெறும் நோக்கில் ‘இ-லைப்ரரி’ திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி சம்பந்தமான கட்டுரைகளை ஏழை, நடுத்தர வகுப்பை சேர்ந்த மாணவர்கள் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய சூழல் உள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர், ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் நோக்கத்தில் ‘சிக்ரி’ நிர்வாகம் ‘இ-லைப்ரரி’ துவக்கியுள்ளது. சிக்ரி ஆராய்ச்சியாளர்கள், பி.டெக்., எம்.டெக்., மாணவர்கள் நூலக புத்தகங்களை ‘இண்ட்ரா நெட்’ மூலம் படிக்கலாம்.

பிற நாடு, மாநில கல்வி நிறுவனம், ஆராய்ச்சி நிறுவனங்களில்படிக்கும் மாணவர், ஆராய்ச்சியாளர்கள் இன்டர்நெட் மூலம் ‘www.cecri.res.in/krc/index.htm’ என்ற இணைய தளத்தில் சிக்ரி நூலகத்திலுள்ள புத்தகங்களை எடுத்து படிக்கலாம். இதை மத்திய அறிவியல் தொழில்நுட்ப துறை செயலர் சமீர் கே.பிரம்மச்சாரி துவக்கி வைத்தார்.